மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆ. பரந்தாமன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருவாய்த்துறை அமைச்சராக இருந்த நேரத்தில் அந்த மாவட்டத்து மக்கள் அவர்களிடையே நேரிடையாக இந்தக் கோரிக்கையைத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். அந்த வட்டாரத்து மக்களின் நீண்ட கால கோரிக்கையைப் பூர்த்தி செய்ய அரசு மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சென்னை மாநகராட்சியை இதுபற்றி கலந்து ஆலோசித்த பொழுது வீராணம் திட்டம் முடிவடைந்தபிறகு இதை எடுத்துக் கொள்ளலாம் என்ற கருத்து தெரிவித்திருக்கிறார்கள். விரைவிலே வீராணம் திட்டம் முடியும். இதுவும் கிடைக்கும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

Jambu Nadhi Scheme

* 576 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the preliminary works relating to the Jambu Nadhi Scheme in Tirunelveli district has been started during the year 1971; and

(*b*) the expenditure incurred on the scheme so far?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

சரபங்கா நதியின் குறுக்கே உள்ள அணை

* 577 வினா—திரு. வீ. செல்லதுரை: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், சரபங்கா நதி கிழக்காற்றில் புதிதாகக் கட்டப்பட்ட அணையை உயர்த்தி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.